# அறுவைப் பக்கம்

## விளையாட்டோ விளையாட்டு!



எனக்கும் இந்த விளையாட்டுக்கும் என்னிக்குமே ஏழாம் பொருத்தம் தாங்க. ஆனா மனசு நெறையா வெளையாடனும் கோப்பைய வாங்கனும் வாங்குறப்போ அமுதா டீச்சர் பொண்ணு என்னைய ஆச்சரியமா பார்க்கனும்ன்னு பல கனவுகளை சுமந்துகிட்டு அலைஞ்சேன்.

சரிஎந்த வெளையாட்டு நமக்கு பொருத்தமா இருக்கும்னு ஆராய்ச்சி பண்ணுறப்போ அல்லாதுக்கு பிட்னெஸ் தான் மாப்ளே தேவை! மொதல ஓட்டப்பந்தயத்திலே நம்ம கணக்கை ஆரம்பிப்போன்னு நம்ம தோஸ்த் ஜார்ஜ் சொன்னதை நம்பி ஓடரதுக்கு வாத்தியார்கிடே பேரைக் கொடுத்திட்டேன்.

அன்னிக்கு பிடிச்சது சனி. ஓடரதுக்கு பயிற்சின்னு சொல்லி வர சொன்னாரு வெளையாட்டு வாத்தியார்னு சந்தோசமா போனோம். ஆரம்பத்திலே Ground டை சுத்தி ஓடி வரணும். எங்க ஸ்கூல் Ground சும்மா ஏக்கரா கணக்கா கெடக்கு.

மொதோ ரெண்டு ரவுண்டு என்னமோ சந்தோசமாதேன் ஓடுனேன். சரி நிறுத்த சொல்லி கொஞ்ச நேரம் கழிச்சு ஓட சொல்லுவாங்கன்னு பார்த்தா ரெண்டு வாத்திக ஆளுக்கொரு மூலையிலே குச்சியோட நின்னுகிட்டு ஓடுங்கடா ஓடுங்கடான்னு வெரட்டிகிட்டு இருக்கனுவ.

எவனாவது கொஞ்சம் ஸ்லோவா ஓடுர மாதிரி இருந்தா பின்னாடி ரெண்டு இழுப்பு வேற. எனக்கு நாக்கு தள்ளுது, நம்ம பய ஜார்ஜ் என்னடான்னா சும்மா பெட்ரோலைக் குடிச்சுபுட்டு பின்னாடி பத்த வச்ச மாதிரி 'பேய்' கணக்கா ஓடிகிட்டு இருக்கான்.

அடப்பாவி மக்கா இப்படி கொண்டாந்து மாட்டி விட்டுட்டியேடா நாயேன்னு நெனச்சுகிட்டு விதியேன்னு நானும் கொஞ்சம் சமாளிச்சு ஓடி ஓடி அப்படியே Ground டை விட்டு ஓடி வந்தவன்தான். இனி Ground பக்கம் தல வெக்கிறதில்லைன்னு கொள்கை பிடிப்போட சுத்திகிட்டு இருந்தேன்.

இருந்தாலும் இந்த வெளையாட்டு தாகம் அடிமனசிலே warmingup பண்ணிகிட்டே இருந்துச்சு.

சரி நாம தான் வெளையாடரது இல்லை அட்லீஸ்ட் எப்படி வெளையாடறாங்கன்னு பார்க்கவாச்சும் செய்யலாம்னு அப்படியாக்கா டிவி ய திருப்புனா ஆஹா வாலிபாலு பேஸ்கட் பால். டென்னிஸ் , சட்டில் கார்க்குன்னு போட்டு தாக்கியெடுக்குராக. அதுலயும் இந்த அம்மணிகள் ஆடுர ஆட்டம் இருக்கே அதையப் பார்க்குறதுக்கு கொள்ளே ன்னு திருவிழாக்கூட்டம் தான் போங்க.

இந்த பொண்ணுங்க ஆடுற டென்னிஸ் இருக்கே அதுக்கு umpirerா இருக்குரதுக்கு ரொம்ப அபார திற மையும் நெசமாலுமே சாமியார்த்தனமும் நெறையா வேணுங்க.

என்னா கஷ்டம்! என்னா கஷ்டம் ! இவங்க வெளையாடி எதிராளி சர்விஸை ப்ரேக் பண்றாங்களோ இல்லையோ பாக்குற நம்ம மனசை போட்டுருக்குற ட்ரெஸ்ஸால கண் டிப்பா ப்ரேக் பண்ணிடுவாங்க. கொஞ்ச காலத்துக்கு முந்தி இந்த டென்னிஸ் வெளையாடுற அம்மணிக எல்லாம் மொழுங்காலுக்கு ஒரு ரெண்டு இஞ்ச் மேலே வரை ஸ்கர்ட்டு போட்டுகிட்டு வெளையாடிட்டு இருந்தாங்க. அப்படியே அது இஞ்ச் பை இஞ்சா உசந்து போயி இப்போ இடுப்புக்கு ரெண்டு இஞ்சுக்கு கீழே வரை ட்ரெஸ் போட்டா போதும்னு ஆகிபோச்சு. இப்படியெல்லாம் பண்ணுனா அப்புறம் எப்படீங்க ஆட்டத்தை கவனிக்கிறது ?

என்னாடா இது பாண்டிக்கு வந்த சோதனைன்னு அப்படியேக்கா கவனைத்தை டென்னிஸ்ல இருந்து வாலிபால் பக்கம் திருப்புனா ஆஹா பீச் வாலிபால்னு போட்டு தாக்கி யெடுக்குராங்க. Ball ஐ இல்லீங்கோ நம்ம மனைசதான். நீச்சல் உடையிலே நீச்சல் தான் அடிக்கனும்னு ஏதாச்சும் ரூல்ஸ் இருக்கா என்ன? இவுக அப்படியே பீச்சோரம் காத்தோட்டமா வெளையாடி கிட்டும் இருக்காக. ஆம்பிளைங்க எல்லாம் ஒரு பத்து இருவது வருசமா இன்னும் அதே மாதிரி தானே ப்ரெஸ் போட்டுகிட்டு ஆடிகிட்டு இருக்காங்க, இந்த பொண்ணுகளுக்கு மட்டும் எப்படீங்க சும்மா நாளொரு மேனியும் பொழுதொரு 'மினி ' யுமா ஆகிகிட்டு இருக்கு அவுக டெரெஸ்ஸு?

வெளையாடி வெளையாடி இவுக உடம்பு இளைக்குதோ இல்லையோ இவுங்களை பார்த்து பார்த்து பலபேரு உடம்பு இளைக்காம இருந்த சரிதான்

ம்ம்ம் ஆனாலும் வெளையாட்டை விட ரசிக்கிரதுக்கு பலது இருக்குங்க வெளையாட்டுலே

இப்போல்லாம் எங்கம்மா இவனுக்கு வெளையாட் டுன்னா உசுரு! டென்னிஸ் மேட்சுன்னா டிவி வூட்டு நகர மாட்டீங்கரான்னு பெருமை பொங்க பக்கத்து வூட்டுகாரங்க கிட்டே சொல்லிகிட்டு இருக்கரதை கேட்கறப்போ எனக்கு ஆனந்தக் கண்ணீரா வருதுங்க

*- ஜொள்ளுப்பாண்டி*

## காரியாலயத்தில் கணக்கு விட...



வேலைத்தளங்களில் மேலதிகாரிக்கு டிமிக்கி விடுவதற்கும் நீங்கள் தான் அலுவலகத்துக்காக ஊணுறக்கமின்றி உழைக்கின்றீர்கள் என்றும் காட்டு வதற்குச் சில ஆலோசனைகள்

கையில் எப்போதுமே எதாவது டாக்குமெண்டையோ இல்லது கம்பெனி பைலையோ தூக்கிக் கொண்டு அலைவது அப்படியே நீங்கள் கம்பெனிக்கு மாஞ்சு மாஞ்சு வேலைப்பார்ப்பது போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கும்.

வெறும் கையோடு உங்கள் மேலதிகாரியின் டேபிளிற்கு முன் நடந்து சென்றால் அவர் நீங்கள் தம் அடிக்கவோ அல்லது கேண்டீனுக்கோ போகிறீர்கள். என்று நினைத்துக் கொள்வார். தவறி அன்றைய நியூஸ் பேப்பரைக் கொண்டு அலையாதீர்கள். அப்படி அலைந்தால் நீங்கள் டாய்லெட்டை நோக்கி செல்வதாக உங்கள் பாஸ் நினைத்துக் கொள்வார்.ஆகவே டாக்குமெண்ட் அல்லது கம்பெனி லோகோ போட்ட பைல் நல்ல அபிப்ராயத்துக்கு 100% உத்தரவாதம் தரும்.

முகத்தை எப்போதுமே சீரியஸாக வைத்துக் கொண்டு கணனி முன் உட்கார்ந்து வலைப்பதிவோ அல்லது ஒரு பேப்பர் ரையோ ரசித்து வாசிக்கலாம். ஆனால் முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டே வாசியுங்கள். சாத்திரியின் பகிடியாயிருந்தால்கூட மறந்தும் சிரித்து விடாதீர்கள். பிறகு அரோகரா தான். களவு பிடிபடும். அல்லது உங்களுடைய உடல் நலம் குறித்த சந்தேகம் எழும்

உங்கள் அலுவலக மேஜையை எப்போதும் குப்பையாக வைத்திருப்பதால் நீங்கள் நிறைய வேலை பார்க்கிறீர்கள் என்ற தோரணையை ஏற்படுத்தும். பிரிண்ட் அவுட்டை எக்கசக்கமாக எடுத்து தள்ளி மேஜை நிறைய நிரப்பி வைத்துக் கொள்ளுங்கள்

Boss உங்களைப் பார்க்கும் போது எல்லாம் நீங்கள் பொறுமையற்றவராக, ஏதோ பிரச்சனையில் சிக்கி தவிப்பது போல் பாவலா காட்டுங்கள். தலையை சொரியுங்கள். உஸ் உஸ் என்று சத்தம் போடுங்கள். மெதுவான குரலில் ஏதாவது முணுமுணுங்கள். Boss காதுக்கு உங்கள் குரல் எட்டுமானால் மெதுவாக 'shit என்று அடிக்கடி கூறுங்கள்.

எந்த காலத்திலும் Boss வீட்டுக்கு கிளம்புவதற்கு முன் நீங்கள் கிளம்பி விடாதீர்கள். இருக்கவே இருக்கு MSN. தாராளமாகக் கடலை போடுங்கள். ஒரு வேளை நீங்கள் கட்டாயம் Boss இருக்கும் போதே வெளியேற வேண்டுமென் றால் உங்கள் Office Bagஐ உங்கள் மேசையிலேயே Boss கண்ணில் படும்படு விட்டுவிட்டு செல்லுங்கள். அது நீங்கள் இன்னும் Office ல் இருக்கிறீர்கள் என்ற தோற்றத்தை உருவாக்கும். மறுநாள் Boss ஆ Office ற்கு வரும் முன் நீங்கள் வந்து விடுங்கள். இல்லையேல் குட்டு வெளிப்பட்டுவிடும்.

நல்ல பெரிய பெரிய கம்பியூட்டர் புத்தகங்களை உங்கள் மேஜை குப்பை களுக்கு இடையில் திறந்து வைத்து அவ்வப்போது அதில் ஏதோ தேடுவது போல பாவ்லா காட்டுங்கள். புத்தகத்தை எப்போதும் மூட வேண்டாம். உங்களைச் சந்திக்க வெளியாட்கள் வந்தால் கூடப் பெரிய பெரிய புத்தகம் எல்லாம் படிக்கிறார். பெரிய அறிவாளியாயிருப்பார் போலும் என எண்ணி உங்கள் மீது மதிப்புக் கூடும்.

ஆனால் அவரும் இந்தக் கட்டுரையைப் பாத்திருந்தால் அடடா இவனும் ஒரு பேப்பர் பார்ப்பான் போலிருக்கே என்று நினைத்துக் கொள்வார்

*- சுப்பன்*

## படத்துக்கு ஒரு கவிதை!



கவலைகள் உன்னை
நோகடிக்கும் பொழுது
உன்விழி ஓரம் ஒரு துளி நீர்
சிந்தும் பொழுது
என்னிடம் சொல்...
நான் உனக்காக அங்கு
வருவேன்!
காரணம் நான் டிஸ்யூ
விற்கிறேன்
ஒன்று வாங்கினால் ஒன்று
இலவசம்!



ஒரு மாலை வேளை...
ரெயில்வே ஸ்டேசன்...
நான் ரெயிலின் உள்ளே....!
நீ வெளியே...!!
நம் இருவர் கண்களும் ஒரே
நேரத்தில் சந்தித்தபோது...
உன் முகத்தில் எத்தனை
உற்சாகம். அப்போதுதான்....
நீ சொன்னாய்......
அம்மா தாயே தர்மம்
போடுங்கம்மா....



மாட்டுக்கும் மனிசனுக்கும்
வித்தியாசம் சின்னதுதான்
மாடு கழுத்திலை
பெல்லு
மனிசன் கழுத்திலை
செல்லு
பெல்லு கலகல என
சிணுங்கும்
செல்லு கரகர என
சினக்கும்

**எனக்கு ஒரு சந்தேகம்... கணக்கியல் தெரிந்தவர்கள் தீர்ப்பீர்களா?**

டெபிட் கார்டிலை செலவழிச்சால் எங்கடை எக்கவுண்டிலை டெபிட் பண்ணுகினம்.

அப்ப கிறடிட் காட்டிலை செலவழிச்சால் கிறடிட் எல்லோ பண்ண வேணும்,

என் அப்படிச் செய்யினமில்லை?

நடிகர் மோகன் பேக்கரி கடைக்குப் போய் 'கேக்' எப்படி கேட்பார்...

மலையோரம் வீசும் காத்து,

மனதோடு பாடும் பாட்டு, கேக்கு தா, கேக்கு தா.....

**வேகமான**

**தொலைத்தொடர்புக்கு**

1.டெலி போன்
2.டெலி விஷன்
3.Tell to Woman

*- கடிக்கப் பிறந்தோர் சங்கம்*